# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No.19/2024

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-6 |
| Name | : மணிவண்ணன் |
| Father's / Husband Name | : நாரயணன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Law by Thiru.R.Ashok Raj Nirmal Reddy, Superintendent of this court on the day of 15.04.2026 Evidence Recorded from 11.25 a.m. / p.m. to 11.45 a.m. / p.m.

**1 எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், 2 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் எம் கே நகர் செட்டிச்சாவடி கன்னங்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன், நான் எலக்டரிசியனாக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகள் 3 மற்றும் 8 எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. 3 மற்றும் 8 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த 3ஆம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி

கையெழுத்து மட்டும் **அ.,த.சா. ஆ,3** ஆகும். 8 ஆம் ஆம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து மட்டும் **அ.த.சா. ஆ,4** ஆகும். அந்த 3 ஆம் எதிரியின் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து மட்டும் **அ.,த.சா. ஆ,5** ஆகும். 8 ஆம் எதிரி எதிரியின் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து மட்டும் **அ.த.சா. ஆ,6** ஆகும். போலீசார் கேட்டதன் பேரில் மேற்படி கையெழுத்து போட்டேன், போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி குவிமுச 161 (3) ன் படியான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டினார். சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் போலீசார் விசாரித்த போது கடந்த 08.09.2023 ஆம் தேதியில் மாலை 05.30 மணியளவில் விமல்குமார் என்கிற விமல், மாரியப்பன் என்கிற பன்னி மாரியப்பன் ஆகியோரர்கள் செவ்வாய்பேட்டை காவல் நிலையத்தில் ஆய்வாளர்கள் கைது செய்து வைத்திருப்பதாகவும் என்னையும், பிரேம் சங்கர் என்பவர் முன்னிலையிலும் மேற்படி எதிரிகளை ஆய்வாளர் விசாரிப்பதாகவும் அதற்காக சாட்சியாக இருக்கும் படி கேட்டுக்கொண்டார் அதற்கு நாங்களும் ஒப்புக்கொண்டோம், பிறகு அன்றைய தினமே மாலை 05.15 மணியளவில் விமல் என்கிற விமல் குமாரை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதில் நானும் பிரேம்

குமார் என்பவரும் சாட்சி கையெழுத்து போடடோம் என்றும் மேற்படி அன்றைய தினமே மாலை 06.00 மணியளவில் 3 ஆம் எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் விமல் என்கிற விமல் குமார் எடுத்து ஆஜர் செய்த கத்தி ஒன்றை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார் என்றும் அந்த மகசரில் நான் மற்றும் பிரேம் குமார் அவர்களும் கையெழுத்து போட்டோம் என்றும், பிறகு அன்றைய தினமே மாலை 06.15 மணியளவில் மாரியப்பன் என்கிற பன்னி மாரியப்பன் அவரை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதில் நானும் பிரேம் குமார் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம், மேற்படி அன்றைய தினமே மாலை 07.00 மணியளவில் 8 ஆம் எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் மாரியப்பன் என்கிற பன்னி மாரியப்பன் எடுத்து ஆஜர் செய்த கத்தி ஒன்றை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார் என்றும் அந்த மகசரில் நான் மற்றும் பிரேம் குமார் அவர்களும் கையெழுத்து போட்டோம் என்று கூறிவிட்டு தற்பொழுது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்**

நான் கையெழுத்து போட்ட ஆவணங்களில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது .

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.